தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நேந்திரன் வாழைக்கு நல்ல விலை கிடைக்கும்

கேரளா மாவட்டத்தில் நேந்திரன் மிக முக்கியமான இரகமாகும் இவை பழமாகவும், சிப்ஸ் ஆகவும் விரும்பப்படுகின்றது. மேலும், இதன் குணங்களான ஜீரணசக்தி அதிகரிப்பு, வயிற்றுபோக்கு கட்டுப்படுத்துதல் மற்றும் புழுத்தாக்குதல், முக்கியமாக அதிக புரதச்சத்து காரணமாக சிறுகுழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. தமிழ்நாட்டில், நேந்திரன் வாழை கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது.

எதிர்வரும் மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 6 வருடங்களில் கோயம்புத்தூர் உழவர் சந்தையில் நிலவிய நேந்திரன் விலை விபரங்கள் மற்றும் கோயம்புத்தூர் குமரன் மொத்த சந்தையில் வர்த்தக ஆய்வுகளை மேற்கொண்டது.

இவ்வருட ஓணம் பண்டிகை விற்பனைக்காக தமிழக விவசாயிகள் கடந்த வருடத்தில் நடவை மேற்கொண்டுள்ளனர். தற்போது இதன் விலை கிலோவிற்கு ரூபாய் 48 வரை கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த மாதத்தின் கடும் காற்று வேகத்தின் காரணமாக காரமடை மற்றும் அன்னூர் பகுதிகளில் பெரும்பாலான மரங்கள் சேதமடைந்த நிலையில் வரத்து குறைவாக காணப்படுகின்றது.

விலை விபர ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவின்படி நேந்திரன் விலை வரும் ஆகஸ்டு முதல் அக்டோபர் மாதம் வரை ஏறுமுகமாக இருக்கும். இதனடிப்படையில் மேற்கூறிய காலத்தில் அறுவடையின் போது நேந்திரன் விலை கிலோவிற்கு ரூபாய் 55–60

வரை கோயம்புத்தூர் உழவர் சந்தையில் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விலையின் அடிப்படையில் விவசாயிகள் அறுவடை சமயத்தில் விற்று பயன் பெருமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி 0422 -2431405*

**மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்குதொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*பழபயிர்கள் துறை,*
*தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி 0422-6611269*

மக்கள் தொடர்பு அலுவலர்